IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
ROCP.No. 1 /2014
Deposition of witness for PW3

Name : பழனி

Father Name : கோவிந்தராஜ்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 1 day of March 2021.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் காட்பாடி காந்திநகரில் கதவு எண். 59-ல் 3வது கிழக்கு மெயின்ரோடு, வசித்து வருகிறேன். மனுவிடைச்சொத்து ஓடைப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ளது. நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. என்னை மனுதாரர் குணசேகரனுக்கு அதரவாக சாட்சி சொல்ல வழக்கறிஞர் அழைத்திருந்தார். மனுதாரர் குணசேகரன் ஆஸ்திரேலியாவில் வசித்து வருகிறார். அவரின் சார்பாக நீலகண்டன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நீலகண்டன் 3 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். மனுதாரர் குணசேகரனும், அவரது முகவரும் இங்கு இல்லாத நிலையில் மனுதாரருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்க முன்வந்திருப்பது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. மனுவிடைச்சொத்தின் கதவு எண் எனக்கு தெரியாது. 5வது மேற்கு குறுஞ்சாலை காந்திநகரில் உள்ளது. மனுதாரர் குணசேகரன் வீடும், எதிரில் 3 வீடு தள்ள தண்டபாணி வீடும் உள்ளது. மனுவிடைச்சொத்தில் ஒரு கட்டிடம் உள்ளது அதை 5 வருடத்திற்கு முன்பு பார்த்தேன். மனுவிடைச்சொத்தில் துன்பும் பின்பும் இரண்டு வீடுகள் இருந்தன என்றால் சரியல்ல. மனுவிடைச்சொத்து ஆறுமுக முதலியார் பார்த்து வந்தார். அவரிடமிருந்து புவனேஸ்வரி கிரையம் பெற்றார் அவர் எந்த வருடம் கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. புவனேஸ்வரியின் கணவர் தான் எதிர் மனுதாரர் என்றால் எனக்கு தெரியாது. புவனேஸ்வரியின் பெயரில் தான் வரிசெலுத்தி வருகிறேன். கடைசியாக எந்த வருடம் புவனேஸ்வரி பெயரில் வரிசெலுத்தினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. புவனேஸ்வரி இறந்து விட்டார் அவர் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவர்

இறக்கும் வரை மனுவிடைச்சொத்தில் இருந்தார். அவருக்கு குழந்தைகள் இல்லை அவரின் கணவர் தான் வாரிசு. புவனேஸ்வரியம்மாள் இறந்த பிறகு அவரது கணவர் தான் மனுவிடைச்சொத்தில் இருந்துவருகிறார் என்றால் சரிதான். புவனேஸ்வரியம்மாள் இறப்பதற்கு முன்பு ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை. அதைப்பற்றி எனக்கு நேரிடையாகவும் தெரியாது. புவனேஸ்வரியம்மாள் இறந்த பிறகு எதிர்மனுதாரர் வரிசெலுத்தி வருகிறார் என்றால் சரிதான். 1998ம் ஆண்டு எதிர்மனுதாரர் தண்டபாணி புவனேஸ்வரியின் அண்ணன் நீலகண்டனின் மகன் குணசேகரனுக்கு பகர அதிகார ஆவணம் எழுதி கொடுத்தார். அது பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் என்ன நிபதந்தையோடு எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் தண்டபாணி தான் இன்று வரை மனுவிடைச்சொத்த அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மனுவிடைச்சொத்தை விட்டு இதுவரை காலிசெய்யவில்லை என்றால் சரிதான். மனுவிடைச்சொத்தில் உள்ள வீட்டின் சாவியை எதிர்மனுதாரர் தண்டபாணி நீலகண்டனுக்கோ, அல்லது குணசேகரனுக்கோ ஒருபோதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புவனேஸ்வரியம்மாள், குணசேகரனுக்கு ஆவணம் எதுவும் எழுதிதரவில்லை. ம.சா.ஆ4 ஆவணத்தை மட்டுந்தான் எழுதி கொடுத்தார் சொத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான். குணசேகரன் மனுவிடைச்சொத்தின் சுவாதீனத்தில் இன்றுவரை இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ4 ஆவணத்தில் சுவாதீனம் கொடுக்கப்பட்டதா வாசகம் கண்டுள்ளதே தவிர ஒருபோதும் சுவாதீனம் குணசேகரன் வசம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சுவாதீனம் கொடுக்கபட்டாததால் ம.சா.ஆ4 நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நானும் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். குணசேகரன் 6,7 வருடம் வரிமட்டும் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு அந்த பத்திரத்தை 28.12.2005 ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு எதிர்மனுதாரர் தண்டபாணி பெயரில் தான் 15 ஆண்டுகளாக வரிரசீதுகள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் குணசேகரன் 2005 வரை சொததின் சுவாதீனத்தை எடுக்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 2005ம் ஆண்டு ம.சா.ஆ4 ஆவணத்தை ரத்து செய்தது செல்லாது என வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். 1998 பத்திரத்திற்கு பிறகு எதிர்மனுதாரருடன் எந்த பேச்சுவார்த்தையும் கிடையாது. 1998ஆண்டிலிருந்து 6,7 வருடங்களாக ரூ.1000/- வாடகை கொடுத்து என்னிடம் அனுப்புவார் பேச்சு வார்த்தை கிடையாது. எனது வீடு கிழக்கு பக்கம் உள்ளது என்றும், எனது கடை ஓடைப்பிள்ளையார் தெருவில் உள்ளது என்றும் எதிர்மனுதாரர் வீடு மனுதாரர் வீட்டிற்கு எதிரில் இருக்கின்ற போது எதிர்மனதாரர் என்னை தேடி வந்து வாடகையை என்னிடம் வந்து என்மூலமாக வாடகையை கொடுத்து வருகிறார் என்றால் அவ்வாறு தான் கொடுத்துவந்தார். சிலநேரங்களில் மனுதாரர் வாடகையை நேரிடையாக கொடுத்துவிடுவார். 6,7 வருடங்களாக ரூ.1200/- கொடுத்து அனுப்புவார். எந்த வருடம் வரை கொடுத்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எதிர்மனதாரர் என்னிடம் வாடகை கொடுத்ததற்கோ, அதை மனதாரரிடம் கொடுத்ததற்கோ ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர், மனுதாரரிடம் நேரிடையாக வாடகை கொடுத்துள்ளது அதைப்பற்றி நேரிடையாக தெரியாது. எதிர்மனதாராருக்கும், மனுதாரருக்கும் எழுத்து மூலமாக வாடகை ஒப்பந்தமும் இல்லை வாய்மொழியாக ஒப்பந்தமும்இல்ல என்றால் சரிதான். அட்வான்ஸ் எதுவும் கொடுத்த விவரமும் எனக்கு தெரியாது. வாடகை எவ்வளவு கொடுக்கவேண்டம், எவ்வளவு உயர்த்தவேண்டும் என்ற விவரமும் எனக்கு தெரியாது. குழாய்வரி, மின்சாரவரி, ஆகியன 1998ஆண்டிலிருந்து எதிர்மனுதாரர் பெயரில் வருகிறது என்றால் சரிதான். நான் இறந்துபோன மருத்துவருக்கு சாட்சியம் அளித்து வருகிறேன். மனுதாரருக்காகவும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவர் வீட்டில் வேலை செய்து வருகிறேன் என்றும் எனக்கு வழக்கு பற்றி ய விவரங்கள் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் ஒருபோதும் வாடகை ஒப்பந்தம் வாய்மொழியாக, எழுத்துமூலமாகவும் ஏற்படவில்லை என்றும், எனவே உரிமையாளர், வாடகைதாரர் என்ற உறவு முறையும் ஏற்படவில்லை என்றும் மனுதாரருக்கு மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.